பால போத மாலை.—நெ. 2

# நற்புத்தி

மாஜி "ஆரியா" பத்திரிகாசிரியர்

தி. அ. சாமிநாதஐயர்

எழுதியது

கார்டியன் அச்சுக்கூடம்

மதராஸ்

1923

*Copyright Registered*]

**[Price Annas 3**

PRINTED AT
THE GUARDIAN PRESS, MADRAS.

1923

# முகவுரை

ஆந்திரதேசத்தில் "சுமதி சதகம்" என்னும் சிறு நூல் ஒன்று சர்வசாதாரணமாக வழங்குகின்றது. இதனில் சில வாக்கியங்களாயினும் முகபாடமாகத் தெரியாத ஆந்திரர் இரார். இஃது இளைஞருக்கு நற்புத்திகூறும் நல்லநூல். இந்தப் புத்திவாதம் எல்லாருக்கும் மிகப் பயன்படத்தக்கதாதலால் இந் நூல் தெலுங்கு நாட்டில் மிகப் பிரபலமாக வழங்குகின்றது. இதனை ஆக்கியோர் இன்னாரென்று தெரியாது. ஆனால், இது நெடுநாளாக வழங்கிவருவது எல்லாருக்குந் தெரியும். தெலுங்குக் குழந்தைக்கு முதன் முதற் கற்பிக்கும் நூல் இதுவே.

இது தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்குப் பயன்படும் பொருட்டு, இதனிலுள்ள பத்தியங்களின் கருத்து சுலபமான தமிழ் வாக்கியங்களாக, "நற்புத்தி" என்னும் பெயரால் இப்போது வெளியேறி வந்திருக்கின்றது. இதுவன்றி, "ஆசாரக்கோவை" யின்படி இளைஞர்க்கு இன்றியமையாத சதாசாரக் குறிப்புக்களும், வேறு சில நீதி வாக்கியங்களும் இச் சிறு புத்தகத்தில் அடங்கி யிருக்கின்றன.

"அகஸ்தியாசிரமம்"
சென்னை
1924ஞு நவம்பர்மீ 15உ

தி. அ. சாமிநாத ஐயர்

# நற்புத்தி

1. ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் கிருபையினுலே, நல்ல விவேகமுள்ளோனே! ஜனங்கள் ஆச்சரியப் படும்படியாகவும், வாயில் நீர் ஊறும்படியாகவும், உருசி யுண்டாகும்படியாகவும் விஸ்தாரமான நீதிவாக்கியங்களைச் சொல்லுகிறேன்.

2. சமயத்தில் உபயோகப்படாத சுற்றத்தார், வழிபட்டாலும் வரமளியாத தேவன், போர்க்களத்தில் ஏறினவுடன் பாய்ந்து செல்லாத குதிரை — இவர்களைச் சீக்கிரத்தில் விட்டுவிட வேண்டு மல்லவா?

3. வேலைக்காரனுக்குரிய சம்பளத்தை அவன் கேட்காமலே கொடுக்க வேண்டும். அவன் கேட்டும் சம்பளங்கொடாத கர்வம்பிடித்த பிரபுவினிடத்தில் ஊழியஞ்செய்து கஷ்டப்படுவதைவிட, விரைந்து நடக்கத்தக்க எருதுகளைக் கட்டிக்கொண்டு நிலத்தை யுழுது பயிர்செய்து வயிறுவளர்க்கலாம்.

4. வீண் ஆசை வைத்துக்கொண்டு ஒருவனிடத்தில் உத்தியோகஞ் செய்யாதே. கோவில் மணியம் வேலை பார்க்க ஒப்புக்கொள்ளாதே. அற்பர்களுடன் எப்பொழுதும் நட்புக்கொள்ளாதே. காட்டில் துணையின்றித் தனியே போகாதே.

5. கீழுதடு அசைந்தும் அசையாமலும், இனிமையான வார்த்தைகளை யொழித்து, மௌனவிரதம் மேற்கொண்டு அதிகாரமென்னும் நோய் நிரம்பி யிருக்கிற சேவிட்டுக் குருட்டுப் பிணத்தைப் பார்ப்பது பாபம்.

6. கடன் வாங்கிக் கொண்டாடும் சிறப்பு, கிழவயதில் யௌவனஸ்திரீ விவாகம், மூடன் செய்யுந் தவம், தப்பிதத்தைத் தெரிந்துகொள்ளாத அரசனது ஆட்சி—இவை அப்போதைக்கு மாத்திரமே யல்லாமல் பின்பும் சொல்லமுடியாத கேட்டை விளைவிக்கும்.

7. கடன் கொடுக்கக்கூடியவன், வைத்தியன், நீர் வற்றுமல் இடைவிடாது ஓடும் நதி, பிராமணன்—இவர்கள் உள்ள ஊரில் குடியிரு. இவர்கள் இல்லாத கிராமத்தில் வசிக்காதே.

8. நட்புப் பாராட்டும் மருமகனும், புலமை வாய்ந்த இடையனும், உமியைக்குற்றி யெடுத்த அரிசியும், வெள்ளைக் காக்கையும் இல்லை.

9. பசி யெடுத்தபோது கிடைத்த அன்னமே அமிர்தத்தைப்போல உருசியாயிருக்கும். கேட்கும்போது தடையில்லாமல் கொடுப்பவனே கொடையாளி. கஷ்டங்களைப் பொறுக்கிறவனே புருஷன். தைரியமுள்ளவனே வமிசச் சிரேஷ்டன் எனப்படுவான்.

10. பசியடங்காத போசனம், ஓய்வுக்கிடமில்லாத உத்தியோகம், அழுக்குப்படிந்தகிணற்றுநீர், ஆட்டுப்பால், ஆட்டுத் தயிர் முதலியன—இவையெல்லாம் வெறுப்புக் கிடமானவை.

11. உலகத்தில் சம்பத்து அளிக்கத்தக்கதே வித்தை. யுத்தத்தில் பிரவேசித்தலே ஆண்தன்மைக்கு அடையாளம். நல்ல புலவர்களை மெச்சிக் கொண்டாடுவதே அறிவுடையோரின் இலக்ஷணம். வாதத்தில் அமர்வதே கேடு.

12. தெளிவாகப் படிக்கமாட்டாத வாயும், 'அம்மா! எ[redacted]த்து அன்னம் வேண்டாத வாயும், 'தம்பி!' என்று அன்புடன் அழைக்காத வாயும் குயவன் மண்பறித்த பள்ளத்திற்கு ஒப்பாகும் என்று சொல்வார்கள்.

13. உடம்பு ஒரு நூறுவருஷம் உயிர்த்திருக்கின்றது பாம்பு ஓராயிரம் வருஷம் ஜீவித்திருக்கின்றது. குளத்தில் போட்ட சேலை அநேக வருஷங்கள் அப்படியே கிடக்கின்றது இவைகளைப்போல நெடுங்காலம் உயிரோடிருப்பதனால் மாத்திரம் பயனில்லை. பூமியிற் பிறந்தவன் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை நாடவேண்டும்.

14. பித்தளைக்குச் சரியெடை தங்கம் சேர்த்து உருக்கி வார்த்தாலும் அது தங்கமாகாது. அதுபோல, நீசன் நல்லவர்களோடு எத்தனை நாள் சகவாசஞ் செய்தாலும் நல்ல குணங்கள் அவனுக்கு ஒரு காலும் பிடிபடா.

15. தண்ணீர் குடிக்குங் குதிரை, கொழுப்பேறிக் களிப்புற்றிருக்கும் யானை, பசுவிற்குச் சமீபத்திலிருக்கும் காளை, படிப்பில்லாத நீசன்— இவைகளின் அண்டையிற் போகாதே.

16. உபகாரஞ் செய்தவனுக்குப் பதிலுபகாரஞ் செய்வது பெரிய காரியமன்று. தீமைசெய்தவனுக்குப் பதில் தீமை செய்ய நினையாமல் நன்மை செய்வதே விசேஷம்.

17. கரும்பு முதலில் தித்திப்பாயிருக்கும்; பின்பு இனிமை குறையும்; முடிவில் சப்பென்று போகும். அதுபோலத் துர்ஜனனுடன் செய்த சிநேகம் முதலில் இனிமையாக இருக்கும்; பின்பு அப்போதைக் கப்போது கபடத்தோடு கூடினதாய்த் துன்பப்படுத்தும்; கடைசியில் தீர்க்க வொண்ணுத் தீமையை விளைவிக்கும்.

18. எந்தச் சமயத்தில் என்ன சொல்லலாமோ அந்தச் சமயத்தில் அந்த வார்த்தைகளைச் சொல்லி, பிறர்மனத்தை நோவப் பண்ணுமல், தானும் மனம் நோவாமல் தப்பித்துக்கொண்டு விவகரிக்கிறவனே கிருதார்த்தன்.

19. எப்பொழுதும் தப்புகளையே தேடிக்கொண்டிருக்கிற புருஷனிடத்தில் வேலை செய்வது தகாது. அது பாம்புப் படத்தின் கீழ் தவளை வாசஞ்செய்வது போலாகு மல்லவா?

20. குளத்தில் நீர் நிறைந்திருக்கும்போது தவளைகள் ஆயிரக்கணக்காக அதனில் வந்து சேர்வதுபோல, ஐசுவரியம் வாய்ந்த காலத்தில் உறவினர்கள் அநேகர் வந்து கூடுவார்கள்.

21. பச்சைக் காய்களைப் பறிக்காதே; பந்துஜனங்களை நிந்திக்காதே—இவை பாவம். போரில் புறங்காட்டாதே; ஆசானுடைய ஆக்கினையை ஒருபோதும் மீறி நடக்காதே.

22. ஓர் ஊருக்கு ஒரு கர்ணிகனும் ஓர் அதிகாரியும் இருப்பது கிரமம். இதனைவிட்டு அநேக அதிகாரிகள் ஏற்பட்டால், எல்லாம் அல்லகல்லோலமாகிக் கெட்டுப்போம்.

23. இஷ்டப்படாத மனைவியையும், இஷ்டப்படாத நண்பனையும் விட்டொழிக்க இஷ்டப்படாதவர்களே இடையர்கள். இவர்களல்லாமல், ஜாதியில் இடையர் குணத்தில் இடையராவரோ? குணமே குலம்.

24. படகுகளில் வண்டிகள் வரும்; வண்டிகளின்மீதும் படகுகள் வரும். படகின்மீது வண்டியும், வண்டியின்மீது படகும் மாறிவருவதுபோலவே சம்பத்துள்ளவனுக்குத் தரித்திரமும், தரித்திரனுக்குச் சம்பத்தும் வரும்.

25. சொர்ணச் சிங்காதனத்தின்மீது நாயை உட்காரவைத்துச் சுபலக்கினத்தில் பட்டங்கட்டினாலும் அது தனக்கு இயற்கையாயுள்ள முன் குணத்தை விட்டொழிக்குமா?

26. தவளை கால் நொண்டியானாலும், பாம்பு நோய்ப்பட்டாலும், மனைவி துஷ்டையானாலும், கிழவயதில் தரித்திரம் நேர்ந்தாலும் பெருந் துக்கம் ஏற்படுவது தப்பாது. இது சத்தியம்.

27. சூரியனால் பிரதிதினம் மலர்த்தப்பெறும் தாமரையானது தன் ஸ்தானமாகிய ஜலத்தை விட்டு வெளியே வந்தால், தனக்கு நண்பனாகிய அந்தச் சூரியனுடைய கிரணம் பட்டே வாடிப் போகும். அதுபோல, அவரவரும் தத்தம் இருப்பிடத்தினின்றுந் தப்பினால் அவர்களுடைய

நண்பர்களே அவர்களுக்குப் பகைவ ராவார்க ளென்பது திண்ணம்.

28. கிராம கர்ணிகன் மற்றொரு கர்ணிகனை நம்பினால் கேடு வரும். ஆதலால், கர்ணிகன் வேறொரு கர்ணிகனிடத்தில் தன் கணக்குகளை ஒப்புவித்து மர்மத்தை வெளியிடக் கூடாது.

29. பரமேசுவரருடைய வண்டியானாலும், இருசுக்குக் கொழுப்புமசியைப் பூசாவிட்டால், செல்லாது. அதுபோல, கிராமகர்ணிகனை யனு சரித்து அவனைத் திருப்திப் படுத்தாமல் புசிக்கிற அன்னம் உடம்பில் ஒட்டாது. அதாவது, கர்ணிகனைப் பகைத்துக்கொள்கிற மிராசுதாரன் சுகப்படமாட்டான்.

30. சாதுவாயிருக்கிற கர்ணிகனையும், மதங்கொள்ளாத யானையையும், கடிக்காத பாம்பையும், கொட்டாத தேளையும் உலகத்தில் ஒருவரும் இலக்ஷியம் பண்ணமாட்டார்.

31. பழத்தை விட்டுப் பச்சைக் காயைச் சுவைத்தால் துவர்ப்பா யிருக்குமே யல்லாமல் இனிப்பா யிராது. எதனையும் பக்குவமறிந்து அனுபவிக்க வேண்டும்.

32. பண்டிதனல்லாதவன் எழுதிய புத்தகமும், நவரசங்களின் தன்மைகளைத் தெரியாதவர்களுடன் செய்யும் சல்லாபமும், எதிரே போகும் காட்டுப் பன்றியை அடிக்கமாட்டாத வீரனுடைய அஸ்திர சஸ்திர ஆயுதப் பயிற்சியும் வியர்த்தமானவைகள்.

33. கெட்ட சகவாசமே கூடாது. கீர்த்தியைச் சம்பாதித்தபின் அது போகாது. கடன் கொடுப்பதனால் கலகம் விளையும்.

34. ஒருவனிடத்தில் இருந்த ஸ்திரீயை மற்றொருவன் அடைய விரும்புவது இரசம் பிழிந்தெடுத்த கரும்புச் சக்கையை எறும்புகள் ஓடிவந்து மொய்ப்பதுபோன்றதே.

35. காரணமில்லாத சிரிப்பும், பூரணமில்லாத கொழுக்கட்டையும், மங்களவாத்தியமில்லாத விவாகமும் வியர்த்தம்.

36 மனைவியுடன் ஒருபோதும் கலகித்துச் சண்டைபோடாதே; இல்லாத பொல்லாத தப்புகளை அவள்மீது ஒருநாளுஞ் சுமத்தாதே. அவளுடைய கண்ணீர் சிந்தினால் இலக்ஷ்மி தேவி அந்த வீட்டில் இருக்க விரும்பமாட்டாள்; உன்னுடைய சம்பத்து அழிந்துபோம்.

37. ஒருவருக்கொருவர் சிநேகமாயிருக்கிற காலத்தில் அவர்களுடைய தப்புக்கள் அவர்களுக்கு ஒருபோதும் தோன்ரு. அந்தச் சிநேகம் நீங்கி விரோதம் ஏற்பட்ட பின்பு தப்புக்களே தோன்றிக் கொண்டிருக்கும்; குணம் தோன்ருது. இது எப்பொழுதும் நிஜம்

38. அற்பமான மனிதனோடு சிநேகம் செய்தால் தப்பாமல் கேடு வரும். சிறிய அற்ப ஜந்துவாகிய மூட்டுப் பூச்சி கடித்தால் கட்டிலுக்கு அடி விழுகிறதைப் பார்த்திருக்கிறோமே.

39. புருஷருடைய படிப்பையும் பெருமையையும் அழகையும் பாராட்டிப் பரத்தையர்

பிரேமை கொள்ள மாட்டார்கள். அவர்கள் பணத்தையே பெரிதும் நாடுவார்கள்.

40. பிரயோஜனமில்லாத பிள்ளை பிறந்தால், அவன் பயனற்றவனுவ தல்லாமல், தந்தையின் குணங்களைக்கூடக் கெடுப்பான். கரும்பின் நுனியில் கதிர் தோன்றினல், கரும்பிலுள்ள தித்திப்பையெல்லாம் போக்கடிக்கும். இது நிச்சயம்.

41. பாம்புகளின் சிநேகமும், வேப்பமரத்தின் தித்திப்பும், அரசர்களின் விசுவாசமும் பொய்யெனத் தெரிந்துகொள்.

42. பணம் சம்பாதிக்கிற புருஷனைக் கண்டால் ஸ்திரீ மிக்க பணிவிடைகள் செய்வாள்; சம்பாதனையில்லாத கணவனைக் கண்டால் எவனும் ஏளனஞ் செய்வாள்.

43. நடந்துபோன காரியத்தைக் குறித்து விசனப்படாதே. அந்தப் புரத்திலிருக்கும் பிரேமைக் குரிய ஸ்திரீகளோடு இரகசியமான வார்த்தைகளைச் சொல்லாதே.

44. எறும்புகள் கஷ்டப்பட்டுக் கட்டின புற்றுகள் பாம்புகளுக்கு இருப்பிடமாவது போல, மூடன் சேர்த்துவைக்கும் பணம் அவனுக்கு உதவாமல் அரசரைச் சேரும்.

45. செல்வம் சேர்ந்தபோது, உறவினரல்லாதவர்களும் உறவினரென்று சந்தோஷமாகச்சொல்லிக்கொண்டு பலாத்காரமாய் உன்னிடம் வந்து சேர்வார்கள்.

46. கைகளுக்கு ஈகையே ஆபரணம், அரசர்களுக்குப் பொய் சொல்லாமையே பூஷணம்.

எப்படிப்பட்டவர்களுக்கும் நீதியே பூஷணம். ஸ்திரீகளுக்கு மானமே ஆபரணமாகும்.

47. காலதாமதத்தையும் சரீரப்பிரயாசையையும் பொறுக்காமல் அவசரப்பட்டுக் குதித்தால் எந்தக் காரியமும் நடவாது. காலதாமதத்தையும் தேகசிரமத்தையும் பொறுத்துக்கொண்டால் கெட்டுப்போன காரியங்களெல்லாம் கைகூடும்.

48. தன்னுடைய கோபமே தன்னைச் சத்துருவைப்போல் வருத்தும்; தன்னுடைய பொறுமையே தன்னை இரக்ஷகனைப்போல் காப்பாற்றும்; தன்னுடைய தயையே தன்னை உறவினரைப் போல் ஆதரிக்கும்; தன்னுடைய சந்தோஷமே சுவர்க்கத்தைப் போல் சுகமளிக்கும்; தன்னுடைய துக்கமே நரகத்தைப் போல் வேதனை செய்யும். இது சத்தியம்.

49. தன் ஊரில் ஒருவன் செய்யுந் தவத்தையும், தன் குமாரனுடைய கல்வித் திறமையையும், தன் மனைவியின் அழகையும், தன் தோட்டத்திலுள்ள மருந்துச் செடியையும் எந்த மனிதனுங் கொண்டாடமாட்டான்.

50. தன் சம்பத்தே தேவேந்திரபதவி யெனவும், தன் தரித்திரமே உலகத்திற் கெல்லாம் நேர்ந்த வறுமை யெனவும், தன் மரணமே யுகப்பிரளய மெனவும், தான் மெச்சின மாதே அரம்பை யெனவும் மனிதன் எண்ணுவான்.

51. தன் உறவினர்கள் இல்லாத இடத்திலும், தன்னிடத்தில் விசுவாசம் கொஞ்சங்கூட

இல்லாத இடத்திலும், சண்டை நடக்கும் இடத்திலும், தன்மீது சந்தேகமுள்ள இடத்திலும் மனிதன் குடியிருக்கக் கூடாது.

52. தாம்பூலம் போட்டுக்கொள்ளாதவாயும், தன் வார்த்தையில் விசுவாசமில்லாதவர்களிடத்துச் சிநேகஞ் செய்து துக்கப்படுகிறவனுடைய விவேகமும், தாமரை யில்லாத குளமும், சந்திரனில்லாத இரவும் ஈனமானவை.

53. பாம்புக்கு விஷம் தலையிலே. தேளுக்கு விஷம் வாலிலே. துர்ஜனனுக்குத் தலை வால் என்னும் வித்தியாச மில்லாமல் உடம்பு முழுவதிலும் விஷம் வியாபித்திருக்கும்.

54. தலையளவு உயரம் தனத்தைக் கொட்டிக் கொடுத்தாலும் வேசியினிடத்தில் நிஜம் இல்லை. அவள் தலையைத் தொட்டுப் பிரமாணம் பண்ணினாலும் அவளை நம்பக் கூடாது.

55. தனது பிராண நாயகனானாலும், தலையிலாவது தேகத்திலாவது ஆடையிலாவது அழுக்குப் பிடித்தவனாயிருந்தால், அவனைக் குலஸ்திரீயும் கூசி வெறுப்பாள்.

56. காட்டில் தேனீக்கள் சேர்த்துவைத்த தேன் பிறருடைய வசமாவது போல, தான் அனுபவிக்காமல் சேர்த்து வைத்த தனம் அரசனைச் சேரும். அதனிற் கொஞ்சம் பூமிக்குச் சேர்ந்தாலுஞ் சேரும்.

57. பக்கத்திலிருந்து மந்திரி சொல்லும் கோள்வார்த்தைகளை அரசன் பிரியமாகக் கேட்டு, விசாரணை செய்யாமலே, குடிகளுக்குத் தீமை

செய்வது கரியெடுப்பதற்காகக் கற்பக விருக்ஷத்தை வெட்டுவது போலாம்.

58. தனாதிபதியாகிய குபேரன் சிநேகிதனாயிருந்தும் சிவன் பிச்சை யெடுக்க வேண்டிவந்தது. ஆகையால், தன்னைச் சேர்ந்தவர்களுக்கு எவ்வளவு திரவியம் இருந்தாலுந் தன்னுடைய அதிருஷ்டத்தின்படியே தனக்கு நடக்கும்.

59. தென்ன மரத்திற்குத் தண்ணீர் வார்த்தால் எவ்விதமாக அது பின்பு மிகவும் இனிமையான இளநீரைத் தருகின்றதோ அவ் விதமாகவே விவேகிகளுக்குச் செய்த சகாயம் பின்பு மிக்க பெருமையையும் சுகத்தையும் தரும்.

60. சகாயமில்லாமல் ஒன்றியாக வழிநடக்காதே. பகைவனுடைய வீட்டில் சிநேகம் பாராட்டிப் போசனஞ் செய்யாதே. பிறருடைய பணத்தை வாங்கி மூட்டைகட்டிவைத்துக் கொள்ளாதே. மனம் நோகும்படியாக ஒருபோதும் வார்த்தை சொல்லாதே.

61. ஆயம் வாங்குகிறவனையும், சூதாடுகிறவனையும், தட்டானையும், விலைமாதரையும், சரக்கு விற்குங் கடைக்காரனையும், இடது கையால் வேலை செய்கிறவனையும் நம்பாதே.

62. நயமான வார்த்தைகளினால் பாலையுங் குடிக்க மாட்டாதவர்கள் பயப்படுத்துவதனால் விஷத்தையும் விழுங்குவார்கள். நயம் எவ்வளவு தோஷஞ் செய்கின்றது பாருங்கள். ஆகையால், நயமான நல்லவார்த்தைகளுக்கு இணங்காதவர்களுக்குப் பயமே காட்டவேண்டும்.

63. அரசன் நியாயம் தப்பினாலும், வீட்டில் விதவையே நிலையாகப் பெரியதனம் வகித்தாலும், கிராமத்துக் கர்ணிகன் கர்மானுஷ்டானப் பற்றுள்ள வைதிகனானாலும் பிராணபத்தான சங்கடம் விளையுமென்று கூறலாம்.

64. நவரசங்களையும் அவைகளின் அர்த்தங்களையும் நன்குணர்ந்து விளங்கும் பண்டித சமூகத்தின் சிரேஷ்டத்தையும், சிரவணானந்தமான சங்கீதத்தையும் அவிவேகிக்கு எவ்வளவு தெரிவித்தாலும் செவிடனுடைய காதில் சங்கை ஊதினது போலவேயாம்.

65. அநேகர் கூடியிருக்கும் சபையிலும், தாயாருடனும், தகப்பனாருடனும், யஜமானருடனும், பிறர்மனைவியருடனும், பிராமணச் சிரேஷ்டர்களுடனும் சிரிக்காதே, பரிகாசம் பண்ணாதே. இது விவகார நீதி.

66. எல்லா ஜீவன்களுக்கும் நீரே பிராணாதாரம்; ஸ்வாரஸ்யமான வார்த்தைகளைச் சொல்வதற்கு வாயே இடம்; புருஷருக்கு ஸ்திரீயே இரத்தினம், ஆடையே அலங்காரம்.

67. எவரோடாயினும் பகைகூடாது. ஏழ்மை வாய்ந்தபின்பு துக்கித்தல் கூடாது. சபையில் கண்டிதமாகப் பேசலாகாது. மாதர்களிடத்தில் மர்மத்தைச் சொல்லலாகாது.

68. யஜமானரையும், தன்னிடத்துப் பிரேமை பாராட்டும் பதிவிரதையையும், ஆலயாதிகளில் தெய்வத்தையும், சற்குருவையும், குமாரனையும் பார்க்கப்போகும்போது புத்திசாலிகள்

வெறுங்கையோடு போகார். இது நீதியான நடக்கைக்குரிய மார்க்கம்.

69. பாரியையானவள் வீட்டுக்காரியங்களைச் செய்யும்போது வேலைக்காரியைப் போலவும் ஆலோசனை சொல்லும்போது மந்திரியைப் போலவும், போஜனஞ் செய்விக்கும்போது தாயாரைப்போலவும் இருத்தல் தகுதி.

70. அன்னிய ஸ்திரீகளுக்குச் சகோதரனாகவும், பிறர்பொருளுக்கு ஆசைப்படாதவனாகவும், பிறருக்கு இதஞ்செய்பவனாகவும், பிறர் தன்னைப்புகழும்போது அதனை ஏற்காதவனாகவும், பிறர் தன்மீது கோபிக்கும்போது கோபப்படாதவனாகவும் இருக்கிறவன் உத்தமன்.

71. பிறர்பொருளை விரும்பாதே; பிறருடைய தப்புக்களை எண்ணாதே. உனக்குச் சமானரல்லாதவர்களுடன் சேராதே; சம்பத்தை இழந்து உறவினர்களைச் சாராதே.

72. எதிர்த்துப் பேசுகிற குமாரனை மன்னித்துப் போஷிக்கலாகாது. பயந்தெரியாத வேலைக்காரனை வைத்துப் பாலித்தல் தகாது. கௌரவத்தைக் கோருகிற புருஷன் அடிக்கடி தன் மனைவியின் பிறந்தகத்திற்குப் போகக்கூடாது.

73. உன் அந்தரங்க அபிப்பிராயங்களைப் பிறருக்கு வெளியிடாதே. காரியமில்லாமல் பிறருடைய வீட்டுக்குப் போகாதே. முரட்டுக் குதிரையின்மீது ஏருதே. அரசாது தயவை நம்பி மனத்தில் சந்தோஷங் கொள்ளாதே. கர்விக்கும்-

படியாகப் பாரியையை வளர்க்காதே. உன் வார்த்தை செல்லாத இடத்தில் இராதே.

74. பல்லுத் தேய்த்துக்கொண்ட வுடனே போட்டுக்கொள்கிற தாம்பூலத்திற்கும், எண்ணெய்ப் தேய்த்துக் கொண்டு தலை முழுகின தினத்தில் தூங்குகிற தூக்கத்திற்கும் விலை இவ்வளவென்று சொல்ல முடியாது.

75. வேலைக்காரன் படுங் கஷ்டத்தைத் தெரிந்து கொள்ளாத யஜமானனிடத்திற் சேவகம் செய்தலும், தாக்ஷிணியம் பாராட்டாதவனிடத்தில் சிநேகஞ் செய்தலும் ஆற்றையெதிர்த்து நீந்துவது போலாம்.

76. பாலுடன் சேர்ந்த ஜலம் பாலைப்போலவே இருந்தாலும் பாலின் சுவையைக் கெடுக்குந் தன்மையை தாகும். ஆகையால், துர்ஜனனுடன் சிநேகஞ் செய்யக் கூடாது.

77. தேள் நெருப்பில் விழும்பொழுது நாம் கவலைப்பட்டு அதனைப் பிடித்துக்கொண்டால் அது நம்மைக் கொட்டுமே யல்லாமல், நாம் செய்த உபகாரத்தை நினைக்காது. துர்ஜனனுக்கு ஆபத்து நேர்ந்தகாலத்தில் கவலைப்பட்டு அதனை நீக்குதல் ஸர்வஜ்ஞனுக்குந் தகாது.

78. தன்னை யழைக்காத காரியங்களுக்குப் போதல், மனம் கலக்காத ஸ்திரீயுடன் சகவாசஞ் செய்தல், யஜமானனுடைய கண்ணுக்குப் படாத உத்தியோகஞ் செய்தல், தன்னை யழைக்காத வீட்டுக் கலியாணத்திற்குப் போதல், விசு

வாலய மில்லாதவரிடத்துச் சிநேகம் பண்ணு தல்—இவை செய்யத் தகாத காரியங்களாம்.

79. ஊருக்குக் கோமுட்டி-வைசியன் பிராணன் போன்றவ னவன்; நெற்பயிருக்கு நீர் பிராணுதார மாகும்; யானைக்குத் தொண்டலம் பிராணனைப்போல முக்கியமானது. ஐசுவரியத்திற்கு ஸ்திரீயானவள் பிராணனைப் போன்ற அங்கமாவள். ஸ்திரீ இல்லையானல் ஸ்ரீ இல்லை.

80. புலிப்பால் கொண்டு வந்து கொடுத்தாலும், தன் ஈரலை யறுத்தெடுத்துக் கையில் வைத்தாலும், ஆனையரம் பணத்தைக் கொட்டினலும் வேசிக்கு விசுவாசம் இராது.

81. முற்பிறப்பிற் செய்த தான தருமங்கள் பயன்படுங் காலத்தில் நாம் நடுக்காட்டில் இருந்தாலும் நான பதார்த்தங்களும் சுகானுபவங்களும் நமக்கு உண்டாகும். முற்பிறப்பில் பிறருக்கு ஈயாதிருந்தால் நாம் பொன்மலையின் மீது ஏறினலும் நமக்கு எதுவுங் கிட்டாது.

82. வீட்டுக்குப் பக்கத்தில் பகைவன் இருந்தாலும், அவன் எழுதத் தெரிந்தவ னனலும், பயிர் செய்யுங் குடியானவன் கோள் சொல்லுகிறவனனலும் கிராமத்துக் கர்ணிகர்களுக்குப் பிழைப்பு இல்லாமற் போம்.

83. தங்க நகையை அடகுவைத்துப் பணம் வாங்காதே. போரில் புறங்காட்டி ஓடாதே. நீ விவேகியானல் கடையில் கடன் வாங்காதே. பைத்தியக்காரனேடு சிநேகம் பண்ணுதே.

84. 'நான் பலம் மிக்கவன். எனக்கு என்ன குறை' என்று அநேக ஜனங்களோடு விரோதப் பட்டுப் பேசுதல் மேன்மையோ? பலம் வாய்ந்த சர்ப்பம் சிற்றெறும்புகளின் கையில் அகப்பட்டுச் சாகாதோ? கர்வம் கவிழ்த்துவிடும்.

85. மண்டலாதிபதியாகிய சக்கரவர்த்தியின் சபையில் சாமர்த்தியமுள்ள மந்திரியில்லாமல் விவகரிப்ப தெல்லாம் மலைபோன்ற மதயானை தொண்டல மில்லாதிருப்பது போலவாம்.

86. மந்திரி யுள்ளவனுடைய துரைத்தனம் தந்திரங் கெடாமல் நடைபெறும். பிரதானியில் லாத அரசனது பாலனம் கீல்நெகிழ்ந்த யந்திரத்தைப் போல நடைபெறாத தாகும்

87. சொல்லுக்குப் பிராணன் சத்தியம்; கோட்டைக்குப் பிராணன் படைத்திரள்; மகளிர்க்குப் பிராணம் மானம்; சீட்டுக்குப் பிராணம் கைச்சாத்து (கையொப்பம்).

88. பெருங் கௌரவம் வாய்ந்தவன் தைரியங் குன்றி அற்ப னொருவனை ஆசிரயிப்பது கொஞ்சமாயுள்ள ஜலத்தில் யானையானது தன் தேகத்தை மறைப்பது போன்றதென்று தெரி.

89. வா போ வென ஆதரவுடன் பேசாத அரசனிடத்தில் உத்தியோகஞ் செய்வதனால் புக்தியாவது* முக்தியாவது உண்டோ? இது விளக்கில்லாத வீட்டில் பாலக்கிரீடைகள்† ஆடினது போலாம்.

*புக்தி.—போசனம், சுகானுபவம்.
†பாலக் கிரீடைகள்.—கும்மியடித்தல் முதலிய ஆட்டங்கள்.

90. சாக்ஷிகளின் மூலமாக நிரூபிக்கப்பட்ட பின் பொய் சொல்லாதே. ஆதரவாயிருக்கிற உறவினரின்மீது நிந்தை சொல்லாதே. மனத்தில் கோபங் கொள்ளும் பிரபுவினிடத்தில் உத்தியோகஞ் செய்யாதே. பாபிகளாகிய துர்மார்க்கர்கள் இருக்கும் தேசத்தில் பிரவேசிக்காதே.

91. பருத்த சரீரமுடையவனைவிட நீதியுடையவனே பலவானவன். மலைபோன்ற யானையின்மீது மாவுத்தன் ஏறுவது போலவாம்.

92. வெள்ளம் புரளும் வயலை உழாதே. பஞ்சம் நேரிட்டாலும் பந்துக்களிடம் போகாதே. பிறருக்கு மர்மத்தை வெளியிடாதே. பயங்காளிக்குப் படைத்தலைமை யளிக்காதே.

93. நெற்பயிர் இல்லாத ஊரும், அதிகாரியில்லாத கிராமமும், துணையில்லாத மார்க்கமும், யஜமான னில்லாத வீடும் சுடுகாடு எனத் தகும்.

94. எவர் எதனைச் சொல்லிய போதிலும் அதனைக் கேட்கத்தகும். அப்படிக் கேட்ட மாத்திரத்தில், அவசரப்படாமல் ஆலோசித்துப் பார்த்து, 'இது மெய், இது பொய்' என்று தெரிந்து கொள்கிறவனே விவேகி.

95. தாம்பூலம் போட்டுக்கொள்ளாத வாயும், வார்த்தை சொல்லிப் பின் இல்லை யென்னும் வாயும், பாட்டுப்பாடத் தெரியாத வாயும் சாம்பல் கொட்டும் பாழ்ப்பள்ள மெனத் தகும்.

96. விலைமாதுக்கு விசுவாசம் உண்டாகாது. ஒருவேளை அவளுக்கு விசுவாசம் உண்டானால் அது நீடித்திராது. பலர் நடக்கும் சாலை

யில் புல் முளைக்காது. ஒருவேளை முளைத்தால் அது வளர்ந் தோங்காது.

97. நன்மை விளைக்காத வித்தை, அபிநய மும் இராகரஸமு மில்லாத பாட்டுகள், சந்தோஷ வார்த்தைகளும் ஆச்சரியத்தைத் தெரிவிக்கும் பேச்சும் இல்லாத சபை, பத்துப்பேர் சந்தோ ஷிக்காத வார்த்தைகள்—இவை யெல்லாம் சார மில்லாதவைக ளாகும்.

98. பரிகாச வார்த்தைகள் விரோதம் விளைக் கும். அதிக சுகம் அதிக கஷ்டம் தரும். வளர்ச்சி தளர்ச்சியின் பொருட்டே யாம். விலை இறங்கு வது ஏறுவதற்காகவே யாம். இது திண்ணம்

99. உபகாரத்தை எண்ணி நன்றிபாராட் டாத கெட்ட மன முள்ளவனையும் சண்டாள புத்தியுள்ளவனையும் தனக்கு முக்கியமான நண் பர்களாகக் கொண்டு ஆளுகிற அரசனுடைய ஆட்சி நீடிக்காமல் நசித்துப்போகும்.

100. ஸ்திரீகளோடு வாதாடாதே. சிறுவர் களுடன் சிநேகம் பாராட்டிப் பேசாதே. நல்ல குணத்தை விடாதே. காப்பாற்றின யஜமானனை ஒரு பொழுதும் தூஷிக்காதே.

101. சம்பத்து வரும்போது, தேங்காய்க் குள் நீர்போல எவர்க்குந் தெரியாமல், இரம்மிய மாக வரும். அது நசிக்கும்போது, யானை விழுங் கிய விளாம்பழம் போல மேலே ஓடு மாத்திரம் இருக்க, மாயமாய்ப் போகும்

102. குமாரன் பிறந்த வுடனே தந்தைக்குப் புத்திரோற்சாகம் உண்டாகாது. அந்தக் குமார

ளைப் பார்த்து நல்லொழுக்க முள்ளவனென்று உலகத்தவர் மெச்சிக் கொள்ளும்போதே தந்தை புத்திரோற்சாக மடைவான்.

103. ஸங்கரஜாதியில் பிறந்தவனானாலும், பயனற்றவனானாலும், பணிப்பெண்ணுக்குப் பிறந்தவனானாலும் தனமுள்ளவனே பிரபுவல்லவா?

104. செய்ந்நன்றி யறிதல், பொறுமை, இனிய வார்த்தை, எந்த உயிர்க்கும் தீங்கு செய்யாமை, கல்வி, பெரியோரால் ஒப்புக்கொள்ளப் பட்ட உலக நடையை யறிந்து செய்தல், அறிவுடைமை, நல்ல சிநேகம்—இவை எட்டும் சதாசாரங்களுக்குக் காரணமாம்.

105. சதாசாரம் தப்பாதவர்கள் நல்ல குடிப் பிறப்பு, தீர்க்காயுசு, ஐசுவரியம், அழகு, காணியாட்சி, சொற் செலவு, கல்வி, ஆரோக்கியம் என்னும் எட்டு நன்மைகளையும் நிரம்பப் பெறுவர்.

106. பெரியவர்களுக்குத் தக்ஷிணை கொடுத்தல், யாகம் பண்ணுதல், தவஞ்செய்தல், கல்வி—இவை நான்கையும் சாஸ்திரவிதி தப்பாமல் நடத்தவேண்டும். அப்படி நடத்தாவிட்டால், இவைகளால் உண்டாகும் பயன் எவ் வுலகத்தும் இல்லையாய் விடும்.

107. விடியற்காலத்திலே விழித்து, அடுத்த நாளில் செய்தற்குரிய தருமகாரியங்களையும் திரவியஞ் சம்பாதிப்பதற்குவேண்டிய காரியங்களையும் ஆராய்ந்து யோசித்துக்கொண்டு, பின்பு பொழுது விடிந்தால் தாய் தந்தையரைத் தொழுதுகொண்

டே எழுந்து, அப்பால் ஒரு காரியஞ் செய்யத் தொடங்குக. இதுவே முதல் ஆசாரம்.

108. பசு, பார்ப்பார், நெருப்பு, தேவதைகள், உச்சந்தலை—இவைகளை எச்சிலையுடையாராய் எவருந் தீண்டலாகாது.

109. புலையன், சந்திரன், நாய், சூரியன், எரிநக்ஷத்திரம் என்னும் ஐந்தையும் எச்சிலையுடையாராய் எவரும் கண்ணால் காணலாகாது.

110. பலவகை எச்சில்களுள் மலங்கழித்தலும் சலங்கழித்தலும் முக்கியமாகப் பாதுகாக்கத் தக்கவைகளாம். எவ்வகை எச்சிலாவது உண்டான விடத்து, ஒன்றையும் படித்தலாகாது; ஒன்றையும் தின்னலாகாது; வாயால் ஒன்றையும் சொல்லுதல் கூடாது; நித்திரை செய்தல் ஆகாது.

111. அதி காலையில் தந்தசுத்தி செய்து கொண்டு, தான் அறிந்தபடி தெய்வ வணக்கம் செய்துவிட்டு, அதன்பின் ஒரு காரியத்தை ஆரம்பிக்கவேண்டும். மாலைக்காலத்தில் நின்றுகொண்டு தெய்வ வணக்கம் செய்தல் குற்றமாதலால், உட்கார்ந்துகொண்டு அது செய்க.

112. தெய்வ வணக்கம் செய்யுமுன்னும், கெட்ட கனா கண்டவிடத்தும், அசுசி யுண்டான போதும், உண்டதைக் கக்கினவிடத்தும், க்ஷவரம் செய்துகொண்ட பின்னும், உண்பதற்கு முன்னும், பொழுதேற நித்திரைசெய்தபோதும், இழிசனர்களைத் தீண்டினபொழுதும், மலசலங் கழித்த பின்னும் நீராடவேண்டும்.

113. ஆடையின்றி ஸ்நானஞ் செய்தலும், இரண்டன்றி ஓராடையுடுத்திக்கொண்டு உண்ணுதலும், ஒருவர் தாம் உடுத்த ஆடையைத் தோய்த்துத் தண்ணீரிலே பிழிதலும், ஓராடை யுடுத்திக்கொண்டு சபையிலே போதலும் கூடா.

114. தலையில் தேய்த்த எண்ணெயை வழித்து மற்ற அவயவங்களில் பூசுதல் ஆகாது. மற்றவர்கள் உடுத்த அழுக்கு வஸ்திரத்தைத் தீண்டுதல் கூடாது. பிறருடைய செருப்பைக் காலில் அணிந்து கொள்ளக்கூடாது.

115. தண்ணீரிலே தம்முடைய நிழலைப் பார்த்தலும், சும்மா உட்கார்ந்துகொண்டு தரையைக் கீறுதலும், இரவில் ஒரு மரத்தின் அருகிலே போதலும், நீரைத்தொடாமல் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதலும், எண்ணெய் தேய்த்துக் கொண்டபின் உடம்பின்மேல் நீரைத்தெளித்துக் கொள்ளாமல் புலையனைப் பார்த்தலும் ஆகா.

116. குளம் முதலானவைகளில் குளிக்கும் போது நீந்துதலும், தண்ணீரிலே எச்சில் உமிழ்தலும், தண்ணீரைக் குடைதலும், தண்ணீரிலே விளையாடுதலும் கூடா. எப்போதும் தலை நீங்கலாகக் கண்டஸ்நானஞ் செய்யலாகாது.

117. பஞ்ச பூதங்கள், பிராமணர், பசு, சந்திரன், சூரியன்—ஆகிய இவைகளைத் தன் உடம்பு போலப் போற்றுவிட்டால், தன் உடம்பினிடத்துள்ள ஐந்து பூதங்களையுமுடைய தெய்வங்கள் உடனே நீங்கிவிடும்.

118. அரசன், ஆசிரியன், தாய், தகப்பன், அண்ணன்—என்பவர் ஐங்குரவர் ஆவர். இவர்

களைத் தேவரைப்போலத் தொழுதெழுதல் வேண்டும். இதுவே சதாசாரம்.

119. ஐங்குரவர்சொல்லிய சொல்லைக்கடந்து ஒருகாரியத்தையும் செய்யலாகாது. முடிவுபெறாத குறைவிரதம் உடையவர்கள் அவ் விரதத்தை மறத்தல் கூடாது. பூரணையில் பல் தேய்த்தலும் மரங்களை வெட்டுதலும் ஆகா.

120. குளித்துக் காலைக் கழுவி வாயைத் துடைத்துக்கொண்டு, உண்ணுமிடத்தை மண்டலஞ்செய்து, அப்புறம் உண்டவரே உண்டவராவர். இப்படிச் செய்யாதவருடைய உணவை இராக்ஷஸர் எடுத்துக் கொள்வர்.

121. கால்கழுவின ஈரம் உலரும் முன்னரே உண்ணத் தொடங்குக. கால்கழுவின ஈரம் உலர்ந்த பின்னரே படுக்கையில் படுக்க.

122. உண்ணும்போது கிழக்கு முகமாகப் பொருந்தி, தூங்காமலும் அசையாமலும் நன்றாக உட்கார்ந்துகொண்டு, வேறொன்றையும் பார்க்காமலும் பேசாமலும், உண்ணும் உணவைத் தொழுதுகொண்டு, சிந்தாமல் செவ்விதாகஉண்க.

123. விருந்தினர் முதியோர் பசுக்கள் பக்ஷிகள் பிள்ளைகள் என்ற இவர்களுக்கு உணவு கொடாமல் தாம் முன்னதாக உண்ணலாகாது.

124 உண்ணும்போது முன் சொன்ன கிழக்குமுகமாகப் பொருந்தி யிருக்கத் தடைநேரிட்டால் மற்றத்திசைகளை நோக்கி உண்ணலாகும். வாயிற்படிக்கு நேராக உண்ணுதல் தகுதி வாயிற்படிக்கு நேராகக் கட்டிலிட்டுப் படுப்பது ஒருபோதும் தகுதியன்று.

125. படுத்துக்கொண்டும் நின்றுகொண்டும் வெளியிடத்தி லிருந்துகொண்டும் உண்ணல் ஆகாது. ஆசையுடன் அதிகமாக உண்ணல் ஆகாது. கட்டிலின் மேல் இருந்துகொண்டு உண்ணல் ஆகாது. முறைமையைக் கடந்து யாதொன்றையும் நின்று தின்னல் ஆகாது.

126. பெரியோர்களுடனே சமபந்தியாக இருந்து உண்ணும்போது அவர்கள் உண்ணு முன்னே உண்ணுதலும், அவர்கள் எழுவதற்கு முன்னே எழுதலும், அவர்களை நெருக்கி அருகில் இருத்தலும், அவர்களுக்கு வலப்பக்கத்திலிருந்து உண்ணுதலும் ஆகா.

127. உண்ணும் போது, கசக்குங் கறிகளைக் கடைசியாகவும், தித்திக்குங் கறிகளை முதலாகவும், மற்றச்சுவைகளுள்ள கறிகளை நடுவாகவும் உண்க.

128. தம்மைப் பார்க்கிலும் முதியவர் உண்ணும்போது அவரைத் தமது பக்கத்திலே வைத்து உண்ணலாகாது. உண் கலங்களுள் சிறிய கலங்களை யமைத்துக் கொண்டு, அன்பும் ஆசாரமும் தவறாமல் உண்க. உண்டபின் உண் கலங்களைக் கிரமமாக நீக்கிவிடுக.

129. உண்டபிறகு, வாயில் கொண்ட நீரை உள்ளே போகாதபடி நன்றாகக் கொப்பளித்து உமிழ்ந்துவிட்டு, எச்சிலறும்படி வாயையும்பாதத்தையும் நன்றாகத் துடைத்துக்கொண்டு, மும்முறையாகத் தண்ணீர் பருகி, அப்பால் கண் காது மூக்கு முதலானவைகளைத் துடைத்துக் கொள்க. இதுதான் உண்டபின் வாய்பூசும் பூச்சு.

130. தண்ணீரை இரண்டுகைகளால் மொண்டும் வாங்கியும் குடிக்கலாகாது. பெரியோர் கொடுப்பதை ஒருகையால் வாங்குதலும், அவர்க்குக் கொடுப்பதை ஒருகையால் கொடுப்பதும் எந்த அவசரத்திலுங் கூடா. உடம்பை இரண்டு கைகளாலும் சொறியலாகாது.

131. மாலைப்பொழுதில் படுத்தலும் வழி நடத்தலும் ஒருவரைக் கோபித்தலும் கூடாது. அந்தியில் விளக்கேற்றுதல் வேண்டும். இரவில் உண்டு ஓரிடத்தில் அடங்கியிருத்தல் வேண்டும்.

132. படுக்கும்போது கடவுளைத் தொழுது, வடதிசையிலும் கோணதிசையிலும் தலையை வைக்காமல் மற்றத்திசைகளில் ஒரு திசையில் வைத்து, மேலே ஒருவஸ்திரத்தைப் போர்த்துக் கொண்டு படுததல் வேண்டும்.

133. ஓரிடத்துக்குப் போகும்போது, இரண்டு தேவருக்கு நடுவிலும் பலபார்ப்பாருக்கு நடுவிலும் போதல் கூடாது. எவராகிலும் தம்பினவிடத்தும் பெரியோர்கள் வாழ்த்தினல் தொழுது கொண்டே செல்க. வழிபோகும்போது சமானமான சிநேகர்களுடனே அவர்களுக்கு நேரே (வரிசைப்பட) மனக்களிப்புடன் செல்க.

134. புல் முளைத்திருக்கின்ற இடம், பயிர் விளைகின்ற இடம், பசுச்சாணம், சுடுகாடு, வழி, தீர்த்தம், கோயில், நிழலுள்ள இடம், பசுமந்தை நிற்கின்ற இடம், சாம்பல்—இந்தப் பத்து இடங்களிலும் எச்சிலுமிழ்தலும் மல சலங் கழித்தலும் ஆகா. அவைகளைத் தவிர்க்க.

135. பகலில் தெற்கு நோக்கியும் இரவில் வடக்கு நோக்கியும் இருந்து மலசலம் விடுத்தலாகாது. பகலில் நெருப்பிலே தண்ணீரைக் கொட்டலாகாது.

136. திசைபத்தையும் மறைத்ததாகப் பாவித்து, அவைகளிலல்லாமல் அந்தரத்தில் செய்வதாக நினைத்துக்கொண்டு எச்சிலுமிழ்தலும் மலசலங் கழித்தலும் செய்வார் ஒழுக்கமுடையார்.

137. ஒரு பாத்திரத்தில் தண்ணீரை மொண்டே வாயலம்ப வேண்டும். தண்ணீரிலே நின்றுகொண்டும் நடந்துகொண்டும் வாயலம்புதல் ஆகாது. நீர் அருந்துவதும் அப்படியே.

138. ஒருவர் உட்கார்ந்துகொண்டிருக்கின்ற இடத்திற்கும் விளக்குக்கும் நடுவிலே போகலாகாது. சுவரின்மேல் எச்சிலையுமிழ்தல் கூடாது. பிறர் உடுத்துக் கழித்த அழுக்கு வஸ்திரத்தைக் கீழேபோட்டுக் கொள்வதும் மேலே போர்த்துக் கொள்வதும் ஆகா.

139 எப்படிப்பட்ட சமயத்திலும் தாம் உடுத்திருக்கின்ற வஸ்திரத்தின் காற்று மற்றவர் மேல் படும்படி செல்லுதல் கூடாது. பலர் நடுவிலே தாம் உடுத்திருக்கின்ற வஸ்திரத்தை உதறுதல் ஒருபோதும் கூடாது.

140. இகழ்ச்சிக்கும் நரகத்திற்கும் காரணமாதலால், பிறருடைய மனையாளை விரும்புதல், கள்ளுண்டல், களவுசெய்தல், சூதாடல், கொலை செய்தல் என்னும் இவைகளைச் செய்யலாகாது, மனத்தில் நினைத்தலும் ஆகாது.

141. பொய்வார்த்தை, கோள் சொல்லுதல், பிறர் பொருளைக் கவரவிரும்புதல், பிறர் செல்வத்தைக் கண்டு பொருமை—என்கிற நான்கும் பிச்சையெடுக்கும்படி செய்வதோடு நரகத்துக்கும் காரணமாகும். இவைகளை யுடையவனைத் தெய்வமும் கெடுத்துவிடும். ஆதலால், இவைகளை மனத்தால் நினைத்தலும் ஆகாது.

142. தமக்கு மாத்திரம் ஆவதாக உலைவைத்துச் சமைத்தல் ஆகாது. தம்முடைய நிமித்தமாக ஓருயிரைக் கொன்று அதன் மாமிசத்தைக் கொள்ளலாகாது. மடைப்பள்ளியை எச்சிற்படுத்தல் ஆகாது. வீட்டுத் தெய்வங்களுக்குத் திருவாராதனம்பண்ணி நிவேதனம் செய்த பிறகே உணவு செய்தல் வேண்டும்.

143. சிறுவர்கள் உண்ணும் போது பெரியோர்கள் உயர்வான பீடத்தின்மேல் இருக்கலாகாது. சிறுவர்கள் செய்யத்தகாத குற்றம் செய்திருப்பினும் அவர்கள் உண்ணும்போது அவர்களை மனம் நோகும்படி யாதொன்றும் செய்யலாகாது.

144. ஒருவர் கண்ணுக்கு மருந்தெழுதிய கோலைச் சுத்தி செய்யாமல் அதனால் தம்முடைய கண்ணுக்கு அந்த மருந்தை யூட்டுதல் ஆகாது. காலோடு காலைத் தேய்த்தலாகாது. புனிதமான பொருள்கள் கிடைப்பின் அவற்றைச் சிரசிலும் கண் முதலிய உறுப்புக்களிலும் ஒற்றிக் கொள்க.

145. அளக்கும் படியை மணை மீதில் வைத்தலும், மணையைக் கவிழ்த்து வைத்தலும், புது வஸ்திரத்தைத் தலைக்கடையில் பிரித்தலும், தலைக்

கடையில் கட்டிலிட்டுப் படுத்தலும் கூடா. தம்மை யறியாதவர்களின் எதிரில் நில்லாது ஒழிக.

146. கலியாணப் பந்தலின் கீழே துடைப்பம், செத்தை, பூவின் புறவிதழ், பழைய கரிப்பானை, கிழிந்த கட்டில் என்னும் இவைகளைப் பரப்பி வைக்கலாகாது.

147. நல்ல செல்வத்தை யடைய விரும்பும் பெண்கள் அதிகாலையிலெழுந்து வீட்டை விளக்கிப் பாத்திரங்களைக் கழுவி, வீடு முழுதும் சாணநீர் தெளித்து, நீர்ச்சால்களையும் கரகங்களையும் நிறைய மலரணிந்து அதன் பின்பு அடுப்பினுள் தீயை மூட்டுதல் வேண்டும்.

148. அஷ்டமி, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தசி, அரசர்க்கு ஆபத்துக்காலம், பூகம்பம், இடி முழக்கம், அசுபம் என்னுமிவை வேதாத்தியயனம் செய்யலாகாத நாள்கள்.

149. கலியாண நாள்களிலும், தேவர்க்குச் சிறப்பான நாள்களிலும், பிதுருக்களுக்குச் சிறப்புச் செய்யும் நாளிலும், திருவிழா நாளிலும், யாகஞ்செய்யும் நாளிலும் தானஞ் செய்வதுடனே விருந்தினர்க்குச் சோறிடுக.

150 உடுக்கும் உடை, நடக்கும் நடை, சொல் இழுக்குதல், திட்டுதல்—என்னும் நான்கையும் சொற்செலவையும் தங்கள் தங்களுடைய நிலைமைக்கும் கல்விக்கும் ஆண்மைக்கும் குடிப்பிறப்பிற்கும் தகுந்தபடி செய்க.

151. நல்லகேள்விச் செல்வ முடையவர்கள் பலர் நடுவிலிருந்து பிறரைப் பழித்தும் இழித்

தும் பேசார்; பலர் நடுவிற் படுத்து நித்திரை செய்யார்; தம்மாலாகாத காரியத்தைச் செய்வதாக ஒருவருக்கு வாக்கிட்டுப் பின்பு அதனைச் செய்யாமலிரார். ஏழைகளைத் தகுதியில்லாமல் முறைமை கடந்து இகழ்ந்து பேசார்.

152. தம்முடைய தேககாந்தி கெடாமல் விளக்கமாயிருக்க வேண்டுகின்றவர்கள் மின்னல், எரிநக்ஷத்திரம், வேசையருடைய அலங்காரம், காலை வெய்யில், மாலைவெய்யில்—என்னு மிவைகளை உற்றுப் பார்த்தல் கூடாது.

153. வஞ்சனையான வார்த்தை, பயனில்லாத சொல், நாவடக்கமின்றில்லாமல் வேண்டியவற்றைச் சொல்லும் சொல், பழிச்சொல், புறணி*—இவைகளை ஒழித்தல் வேண்டும்.

154. ஒரு பொருளை விசிறியெறிதல், கல்லெறிதல், வீளை† செய்தல், தூரப்போகின்றவனையழைத்தல், பிறருடைய சொற்களையும் செய்கைகளையும் நடித்துக்காட்டல், வேகமுடையவனுதல், ஒளித்துக் கொள்ளல், கையொடு கையைத் தட்டுதல், வெளிப்படையாகக் கண்ணிடுதல் மூக்கசைத்தல் முதலிய அங்கசேஷ்டைகளைச் செய்தல்—இவைகளைச் செய்து பழகுதல் ஆகாது.

155. தம்மை நாடிவருகிற விருந்தினர்க்குச் சோறிடுதலுடனே செய்யத்தக்க சிறப்புக்களாவன,—இனிய முகத்துடனே இனிய சொல் உரைத்தல், கால் கழுவ நீர்தரல், இருக்க மணை

* புறணி.-புறங்கூறல். † வீளை.-சீழ்க்கை, சத்தம், கனைத்தல்.

கொடுத்தல், படுக்கப் பாய் கொடுத்தல், படுக்க இடங் காட்டுதல் முதலியனவாம்.

156. உக்கிரமாகச் சண்டைசெய்கிற இடத்திலும், கள்குடித்துக் களித்தாடுகிற இடத்திலும், பரத்தையர் சேரியிலும், குணங்களை யாராய்ந்து சிநேகந் தளரவிட்ட இடத்திலும், அநேகர் வருவது போவதான தண்ணீர்த் துறையிலும் நெடுநேரம் தங்கியிருப்பது தகுதி யன்று.

157. முற்றிய புல் இருக்கிற இடத்திலும் முதிர்ந்தகாடுள்ள இடத்திலும்இருக்கக்கூடாது. அவைகளைத் தீயிட்டுக் கொளுத்தக் கூடாது. மழைபெய்யும் பொழுது காலைப் பரப்பி ஓடுதல் கூடாது. வழிதுறை தெரியாத காட்டில் தனியாகப் போதல்கூடாது. மழையின்றிக் காலங்கெட்டாலும் குடிபொழுக்கந் தப்பி நடப்பதுகூடாது.

158. குடியில்லாத வீட்டிலும், கோயிலினுள்ளும், சுடுகாட்டினுள்ளும், ஊரில்லாத இடத்திலிருக்கிற ஒன்றியான பழைய மரத்தினிடத்தும் துணையின்றித் தனியே போதலாகாது. பகலில் நித்திரை செய்தலாகாது. இவை யெல்லாம் நோயுண்டாவதற்கு ஏதுவாம்.

159. ஒருவர் எழுந்துபோகும்போது அவரை அழைத்தலும், தும்முதலும், 'எங்கே போகிறீர்?' என்று கேட்டலும் கூடா. அப்படி அவர் போகும் போது அவருக்கு முன்னேபோய் எதிர்முகமாகநின்று ஒன்றைச் சொல்லாமல் அவர் பக்கத்தில் நின்று அதனைச் செய்க. பெரியார் போகும்போது அவரை வலங்கொண்டு போகுக.

160. ஒருவரைப் பார்த்து, 'உங்களுடைய உடம்பு நன்றாயிருக்கிறது' என்று சொல்லலாகாது. விளக்கை வாயினால் ஊதி அவித்தல் கூடாது, அடுப்பிலுள்ள நெருப்பை அவித்தல் கூடாது. அடுப்பிலுள்ள நெருப்பின் சுடர் தம் மீது படும்படியாகக் குளிர்காய்தல் கூடாது.

161. தம்முடனே பெரியோர் வழிநடந்து வரும்போது வாகனம் முதலியவற்றில் ஏறிப் போதல் கூடாது; காலில் செருப்பைத் தொடுத்துச் செல்லுதல் கூடாது; குடை முதலியவற்றைப் பிடித்துக்கொண்டு போகலாகாது.

162. நல்ல மரபைச் சேர்ந்த நான்மறையாளரைத் தம்முடைய குரவரைப்போல் பாவனை செய்ய வேண்டும் என்பது சாஸ்திர மறிந்த பெரியாரது அபிப்பிராயம்.

163. குரவர்களுக்குச் செய்யத்தகும் மூன்று சிறந்த உபசாரங்களாவன,—அவர்களைச் சாட்டாங்கமாக நமஸ்கரித்தல், அப்படி நமஸ்கரிக்கும்போது அவர்கள் 'நல்லது; எழுந்திரு' என்ற போது எழுந்திருத்தல், அவர்களைக் கண்டவுடனே எழுந்திருத்தல் என்பனவாம்.

164. துறவிகளைப் பாதுகாத்தல் வேண்டும். பழிபாவங்களுக்கு அஞ்சுதல் வேண்டும். தாம் கற்ற திறத்தைத் தமது குரவர்முன்னே எடுத்துச் சொல்லுதல் தகுதியன்று.

165. பார்ப்பார், தவசியர், சுமையுடையவர், நோயாளர், இளைஞர், பசுக்கள், பெண்டிர் — ஆகிய இவர்களைக் கண்டால் வழி விட்டு மிகவும்

விலகிச் செல்கிறவர்களே ஒவ்வொரு பிறப்பி லும் வாழ்த்தப் பெற்றவராவர்.

166. பிரபுவினுடைய வாயிலினிடத்துச் செல்வதற்குத் தடையுண்டானால் கோபித்தலும், பிரபுவுடன் அதிக சொந்தம் பாராட்டுதலும், கூடா. பிரபு தமக்கு வெகுமானஞ் செய்யும் போதும், தலையளி* செய்யும் போதும் தம் நிலையை மறந்து அவை தமக்கு அமையா வென்று இகழ்தலாகாது. பிரபுவுக்குச் சமமாகத் தம்மை அலங்கரித்துக் கொள்ளுதல் கூடாது. சபையில்ஊடறுத்துப்போய்வேறொருவனைச்சேர் தலாகாது. இவையெல்லாம் கெடுதி தருவனவாம்.

167. தமக்குப் பொருந்தின உறுதிச்சொல் லையும், பிரபுவினால் மிகச் சிறப்படைந்தவர் சொல் லிய வார்த்தைகளையும், அதுவு மன்றிப் பிறர்க்கு உறுதியாகிய கட்டுரைகளையும் பிரபுக்களிடத்தில் சொலலுதல் ஆகாது. சொல்வது தமக்குக் கெடுதி தரும், குற்றமாக முடியும்.

168 பெரியார் ஆசைப்பட்டவைகளை ஒரு வர் தாம் விரும்புதலும்; கீழ்மக்களை வீட்டினுள் அழைத்துப் போதலும்; தம்முடனே நெஞ்சு கலந்த நெருக்கம் இல்லாதவர் அறிவில்லாத சிறு பிள்ளையேயாயினும் அவரை உயர்வாக வன்றி இழிவாகப் பேசுதலும் ஆகா.

169. அரசன் செய்கிற காரியத்தை வெறுத் தலும், அவனோடு கலகங் கொள்ளலும் ஆகா. விலகியன்றி அரசனுக்கு நேர்முகமாக எதிரில் நிற்றல் கூடாது. அரசன் ஏகாந்தமாக இருக்கும்

* தலையளி.—முகமலர்ந்து இனிய கூறல்.

போது அவனிடத்தில் ஒருவர் தம்முடைய காரியங்களைச் சொல்லிக் கொள்ளுதல் ஆகாது.

170. இனிமையான பொருள்களை நாங்கள் அனுபவித்து அறிந்து இருக்கிறோமென்று அரசனிடத்தில் சொல்லவொண்ணாது. காக்கை வெண்ணிறமுடையது என்பது போன்ற அபவாதங்களை அரசன் பேசினாலும் அவன்மேலுள்ள அன்பு நீங்கி அவனை வெறுத்தல் ஆகாது.

171. எச்சிலுமிழ்தல், உயர்வான பீடத்திருத்தல், அடைக்காயுண்ணல்*, வகைப்படாத வார்த்தை சொல்லல், உறங்குதல் என்னும் ஐந்து காரியங்களையும் பெரியார் முன்னர்ச் செய்யற்க.

172. பெரியாரெதிரில் தமது செல்வம் கல்வி விளக்கம் குணம் முதலானவைகளைப் பலமுறையும் விரித்துப்பேசுதல் ஒழிக. இது நற்குடிப்பிறப்பினருடைய ஒழுக்கம்.

173. அரமனையிலும் ஆலயத்திலும் தெய்வங்கள் விழாக் கொள்ளு மிடத்திலும், அரசர்கள் புறம் போந்து ஊர்வலம் வருகிற இடத்திலும் கண்டால் குரவரையும் வணங்காதொழிக.

174. பெரியாரெதிரில் சிரித்தல் கொட்டாவிவிடுதல் காறியுமிழ்தல் தும்முதல் என்னுமிவைகளைச் செய்யற்க. செய்தால் பழி வளரும்.

175. பெரியார் எழுந்து நின்றக்கால் தாமும் அடக்கத்தோடு எழுந்திருந்து நிற்க. அவர்கள் உயர்ந்த இடத்தின்கண் இருந்தால் அவர் ஏவா

---

* அடைக்காய்.—பாக்கு; இங்குத் தாம்பூலத்தைக் குறித்தது.

மல் அதன்மேல் ஏறு தொழிக. பெருங்குணத்தை யுடையார் சொல்லின் செவிகொடுத்துக் கடைப் பிடித்துக் கேட்க. அவர் சொல்லி ஒழிந்தக்கால் அவர் சொல்லியதனைப் பின்பு வினவற்க.

176. நன்மாணுக்கராவார், ஆசிரியர் பாடஞ் சொல்வதை நிறுத்தினால் தாமும் நிற்கக்கடவர்; ஆசிரியர் எழுந்துபோ என்று சொல்வதற்கு முன்னர் எழுந்துபோகார்; ஆசிரியர் பாடம் முதலியவற்றைச் சொன்னால் செவி தாழ்த்துக் கேட்பர்; அவர் யாதொன்றும் சொல்லா விட்டால் தாமும் வினவாமல் இருக்கக்கடவர்.

177. பெரியோர் கூடியிருக்கிற சபையிலே ஆடையைக் களைதலும், காதைச் சொறிதலும், கையை மேலெடுத்துப் பேசுதலும், பெண்டிரை உற்றுப் பார்த்தலும், பிறர் தமது செவியிற் சொல்லும் சொல்லைக் கேட்டலும் ஆகா.

178 ஒருவரிடத்தில் ஒன்றைச் சொல்லும் போது அவசரப்படுதலும், சொன்னதை மேன் மேலும் சொல்லுதலும், பொய்யைச் சொல்லுதலும், சொல்வதை வெகுவாய் விரித்துச்சொல்லுதலும் கூடா. சொல்ல வேண்டிய பொருளெல்லாவற்றையும் சில எழுத்துக்களில் அடக்கிக் காலத்திற்கேற்றபடி சொல்லவேண்டும்.

179. நற்குலப்பெண்டிர் தம்முடைய கணவரது தேகத்தின் வடிவத்தையன்றிப் பிறருடைய தேகத்தின் வடிவழகை வியந்து பாரார். தம்முடைய வடிவழகையும் (கண்ணாடி முதலியவற்றில்) வியந்துபாரார். தலைமயிரைக் கோதுதலும் கைந்நொடித்தலும் செய்யார்.

180. பெரியா ரெதிரில் வேறொருவரோடு கூட இருந்துகொண்டு ஒரு காரியத்தை ஆராய்த லும், அவருக்குச் சமீபத்தில் நிற்றலும், அவர் வேறொருவனிடத்துச் சொல்வதொரு காரியத் தைச் செவிகொடுத்துக் கேட்டலும் ஆகா. அப் போது அவரைச் சார்ந்து இருப்பினும், சமீபத் தில் செல்வதாயினும் வேறொரு காரியத்தில் கவ னமாயிருப்பது போல இருக்கவேண்டும்.

181. தமக்குத் துன்பம் நேரிட்ட காலத்தில் அதனைப் பொறுத்தலும், இன்பம் உண்டானல் மற்றவர்களுக்கு நன்மை செய்வதில் சந்தோஷங் கொண்டு நடத்தலும், அன்பு நீங்கினவருடைய வீட்டை யடையா திருத்தலும் ஆகிய இம் மூன் றும் ஒருவழிப்பட்டவர்களிடத்தே காணப்படும் சிறந்த குணங்களாம்.

182. கோபங்கொண்டு நின்றவிடத்தும் தம் முடைய குரவரது பெயரைச் சொல்லல் ஆகாது. நெடுநேர மளவாக மனையாளை மிகக் கடிந்து பேசிக்கொண்டிருத்தல் கூடாது. தம்மிற் பெரி யோரையும் புலையரையும் அவர்களுடைய பெயர் கொண்டு ஒருபொழுதும் அழைத்தலாகாது.

183. வேறொருவருடைய வீட்டிற்குள் புழக் கடை வாயிலாகப் போதலாகாது. பெரியார் தம் கோஷ்டியோடு கூத்து முதலான வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் போதும், உரிமை மகளிரோடு இருக்கும் போதும் அவ் வத்தொழி லுக்கு உரியவர்களன்றி மற்றவர்கள் அவர்களைப் போய்ப் பார்த்தலும் பேசுதலும் கூடா.

184. பொதுமகளிர் வசிக்கின்ற இடத்திற்குச் சமீபமாக உள்ள தம்முடைய இடத்தை வசிப்பதற்குரிய சிறந்த இடமாகக் கொள்ளலாகாது. அங்ஙனங் கொண்டால் தம்முடைய மனைவியரது மனவிருப்பமெல்லாம் வேறுபடும்.

185. ஒருவர் பக்கத்திலே போகும்போது ஒருவரிசைப்படப் போதலாகாது. ஒருவருடைய நிழலை மிதித்துக்கொண்டு நிற்க வொண்ணாது. முன்னதாகவே ஆராய்ந்து கொண்டு பேசுவதல்லாது பேசும்போது ஆராய்ச்சிசெய்து பேசுதல் கூடாது. ஊராருக்கு வெறுப்பான காரியங்களைச் செய்தல் அடுக்காது. அரசருடைய படையின் அளவைப் பகைவருக்குச் சொல்லலாகாது.

186. பாம்பு அரசன் நெருப்பு சிங்கம் என்னும் இவை நான்கையும் இளையனவென்றும் எளியனவென்றும் பழகினவென்றும் இகழ்ந்தால் துன்பம் உண்டாகும்.

187. எவ்வளவு மிக்க செல்வம் உடையவராயினும் தருமம், கலியாணம், ஒருதொழிலின் முயற்சி, வீடு என்னும் இவைகளை அரசரைக் காட்டிலும் மேன்மையாக ஒருவர் செய்தலாகாது. செய்தால் தம்மிடத்துள்ள செல்வம் அழியும்.

188. ஐங்குரவரையும் பெரியோரையும் கண்டால் 'நீங்கள் உண்டது என்ன?' என்று ஒருநாளும் கேட்கலாகாது.

189. ஒருவர் கட்டிலின்மீது படுத்திருந்தால் அப்போது அவருடைய காலைக் கழுவுதலும், அவருக்குப் பூச்சூடுதலும், சந்தனம் பூசுதலும்,

அவர் அருகில் நிற்கலும் ஆகா. கிடந்தவர் களின் கட்டிலின்மேல் மிதித்தேறி நிற்கலாகாது.

190. தாம் ஒருவருக்குச் செய்த நன்றியைத் தாமே பாராட்டுதலாகாது. தாம் உதவிய வகை யால் அவர்க்கு வந்த பயனை உரைக்கலாகாது. தமக்கு ஒருவர் இட்ட உணவை இகழ்ச்சி செய்ய லாகாது. தாம் செய்த தருமத்தையும் அனுஷ் டித்த விரதத்தையும் தாமே புகழ்ந்து கொள்ளு தலும் மதித்துப்பேசுதலும் ஆகா.

191. கிடைப்பதற்கு அருமையா யிருக்கிற பொருள்களை விரும்புவதும், இழந்த பொருளைக் குறித்து வருந்துவதும், நீக்கமுடியாத துன்பம் நேரிட்டால் அதற்கு மனங்கலங்குவதும் பய னில்லாத காரியங்களாம். தாம் முயன்று செய்யுங் காரியங்கள் கை கூடாமையால் வந்த துன்பத் திற்கு அறிவுடையார் மனம் வாடார்.

192. ஒருவர் தலையில் முடித்த பூவைத்தம் முடைய தலையில் முடித்தலும், ஒருவர் மோந்த பூவைச் சூடுதலும், பிராமணரிடம் கோதானம் வாங்குதலும் கூடா. பிறர் தலைக்குச் சூடிய பூவை மோந்தலாகாது; மோந்த பூவைச் சூடலாகாது. புலையருக்குத் தாம் உண்ட எச்சிற் பண்டங்களைக் கொடுத்தல் ஆகாது.

193. காட்டிலேயாயினும் தமக்கு மூத்தோர் எதிரில் உடலின்மீது போர்த்துக் கொள்ளுதலும் கர்வித்துத் தலைநிமிர்ந்து இருத்தலும் அட்ட ணைக் காலிட்டு இருத்தலும் ஆகா.

194. அந்தணருடைய வாய்ச் சொல் தவறு தாதலால் ஒரு நல்ல காரியத்தைச் செய்யும்போது

அந்தணரையே நல்லநாள் கேட்டுச் செய்க; புலையரைக் கேட்டுச் செய்யற்க.

195. பெரியோர்கள் இருக்கிற சபையிலே யாதோர் அங்கசேஷ்டையும் செய்யலாகாது. நடக்கும்போது அழுக்குள்ளவைகளைத் தேய்த்துக்கொண்டு நடத்தல் ஆகாது. கடுமையான சொற்களை எக்காலத்திலும் சொல்லுதல் கூடாது. இருவராக இருந்து பேசுமிடத்தில் போதல் ஆகாது. இவற்றை ஒழிக.

196. ஒருவரோ டொன்றைச் சொல்லுமிடத்துக் கையைச் சுட்டிக்காட்டிப் பேசுதல் ஆகாது. காலின்மேல் (காலால்) எழுதிக் காட்டுதல் ஆகாது. கல்வி முதலியன இல்லாதவர்களை மெய்யெனச் சாதித்து அவற்றையுடையவர்களுக்குச் சமானமாகக் கூறுதல் ஆகாது. குரவர் கொடுப்பதை உட்கார்ந்துக்கொண்டே வாங்கிக் கொள்ளுதல் கூடாது.

197. தன் உடம்பு, தன்பெண்டாட்டி, தன்னிடத்தில் ஒருவர் அடைக்கலமாக வைத்த பொருள், தனக்கு ஆபத்துக் காலத்தில் உதவியாகும்படி சேர்த்து வைத்த பொருள்—இவை நான்கையும் அருமையாகப் பாதுகாக்காவிட்டால் மிக்க துன்பம் உண்டாகும்.

198. கிடையாத காலத்திற்கு உதவும்படி கிடைத்த காலத்தில் உணவை எறும்பு சேர்க்கும். தூக்கணங்குருவி குளிர் காற்று முதலியவற்றால் இடையூறுறாத வகையாகக் கூடு கட்டிக்கொள்ளும். காக்கைகள் இனத்தை அழைத்து உண்

ணும். இவ்விதமாக இவைகளின் செய்கையை யனுசரிப்பவர்களுக்கு இல்வாழ்க்கையின் ஒழுக்கம் எவ்விதத்திலும் சித்தியாகும்.

199. பெரியோரிடத்தில் ஏதாகிலும் சொல்வதானால், வணங்கி நின்றுவது வாய்பொத்தி நின்றுவது சொல்வதன்றி வேறு விதமாகச் சொல்லலாகாது. அவர்முன் குற்றம் யாதும் உண்டாகாமல் ஆராய்ந்து சொல்க.

200. ஆரவாரஞ் செய்யுமிடத்தைப் பார்த்தலும், மடைப்பள்ளியிற் போய் விஷயங்களை எடுத்துரைத்தலும், பெண்டிர்கள் உறைகின்ற அறைக்குட் புகுதலும் ஆகா. 'வாரும்' என்று பிரியமாக அழையாத மனைக்குட் புகுதல் ஒழிக.

201. அறியாத தேசத்தான், வறியோன், மூத்தோன், சிறுவன், உயிரிழந்தவன், பயமுற்றவன், உண்பவன், பிறருடைய சேவகத்திலமர்ந்தவன், மணமகன்—என்னும் இவ் வொன்பதின்மரும், உண்மையாக உரைக்குமிடத்து, ஆசாரம் இல்லாதவர்களாவர்.

202. ஒருவனுடைய ஆடையாபரணங்களைப் பார்த்து அவனைப் பெருமைப்படுத்துவது சரியானதன்று. அவனுக்கு உள்ள கல்வியையும் குணத்தையும் தெரிந்து பெருமைப்படுத்துவதே தகுதி. ஆடையை எவரேனும் பெருமைப் படுத்துவரோ? ஆடையில்லாத ஈசன் எல்லாம் உணர்ந்தவனாக இருக்கிறான். ஆடையில்லையென்று ஈசனை வழிபடாதவர் உண்டோ ?

203. பிரபுவின் கிருபையிருந்தால் வேலைக்காரனிடத்துள்ள தோஷமும் குணமாகவே கொள்

ளப்படும். அருணன் அங்கவீனனுக இருந்தாலும் சூரியனது அனுக்கிரகத்தால் அவனுக்குச் சாரதியாகப் பெருமையுடன் பிரகாசிக்கிருன்.

204. உத்தம புருஷர்களைப் பணிந்து போற்றுவதனுல் அவர்களுடைய தயவைப் பெறலாம். சூரனைப் பேதம் முதலான தந்திரங்களினுல் வசப்படுத்திக் கொள்ளலாம். இழிஞனை அற்ப திரவியத்தினுல் வசப்படுத்திக் கொள்ளலாம். இஷ்டனை அன்பினுலும் தர்மத்தினுலும் நல்லொழுக்கத்தினுலும் திருப்திப்படுத்தவேண்டும்.

205. இழிகுலத்திற் பிறந்த அரசனும், மூர்க்கமான புத்திரன் வாய்ந்த பண்டிதனும், வறிஞுயிருந்து வளமை படைத்த பணக்காரனும் உலகத்தை மதிக்கமாட்டார்கள்.

206. பணமில்லாதவன் அதிக துக்கமுடையவனுவன், நோய்ப்பட்டவன் அதனினும் அதிக துக்க முடையவனுவன், கெட்ட மனைவியுள்ளவன் பரமதுக்கி யாவன்.

207. மனிதன் கடவுளை மறந்து மிகக் கோணலான வழிகளில் நடந்தபோதிலும் முடிவில் கடவுளிடத்துப் பக்தியுள்ளவனுகி அவரையே சரணமடைவன்.

208. எவ்வளவு தூரம் நடந்து திரிந்தவனும் ஓரிடத்தில் அமர்ந்து அமைதி கொள்ளவே விரும்புவான். அப்படி அமைதி கொள்ளும் இடம் அவனுடைய சிரமத்தைத் தணித்துச் சுக மளிக்கத் தக்கதாக இருக்க வேண்டுமென்று அவன் விரும்புவா னல்லவா?

209. மனிதனுடைய துக்கத்தைப் போக்கி அமைதி அருளத்தக்கவர் கடவுள் ஒருவரே. ஆறுகள் எவ்வளவு கோணலாக வளைந்து வளைந்து ஓடினாலும் முடிவில் கடலையே அடைந்து அமைதிகொள்ள வேண்டும்.

210. உலகத்தில் உற்றார் உறவினர் என்பார் ஒருவருக்கொருவர் சமயம்நேர்ந்தபோது சகாயப் பட்டுக் காரியங்களை நடப்பிப்பதே நட்பின் பயனாகும். வண்டிகளை ஓடங்கள் நீரின்மீது ஏற்றி அக்கரை சேர்ப்பதையும், அவ் வோடங்கள் ஊனப்பட்டால் அவைகளை வண்டிகள் ஏற்றிச் செல்வதையும் பார்க்கிறோமல்லவா ?

211. இரப்பவர்க்கு ஈயாமல் இல்லையென்று மறுக்கிற உலோபிகளுக்குத் தரும தேவதை ஒரு போதும் சம்பத்தை யளிக்கமாட்டாள். எப்படி யெனின், கன்றுகளைப் பால்குடிக்க வொட்டாமல் தானே பாலைக் கறந்துகொள்ள விரும்புகிற வனைப் பசுவானது காலால் வீசி உதைக்குமே யல்லாமல் பாலைக் கறந்துகொள்ள விடுமா ?

212. பிறர்க்கும் கொடுக்காமல் தானும் அனுபவிக்காமல் செல்வத்தை வைத்துக் கொண்டிருக்கிறவன் உலோபி. அவன் நீர்க்கரையி லுள்ள நாயைப் போன்றவன். அது நீர் மொள்ள வருகிறவர்களைக் குரைத்து வெருட்டும், தானோ அள்ளிக் குடிக்காமல் நக்கியே சுவைக்கும்

213. அரசனாயிருப்பவன் எப்பொழுதும் சமயம் பார்த்துத் தன் குடிகளை மரியாதையோடு பரிபாலனஞ் செய்து, அவர்களிடத்துப் பிரேமை காட்டித் தனக்கு வேண்டிய திரவியத்தைக் கேட்

டால் அவர்கள் சந்தோஷமாகக் கொடுப்பார்கள். சமயம் பார்க்காமல் கோபங்காட்டி அடித்து வருத்திப் பணந் தண்டினால் குடிகள் துன்பப்படுவதேயல்லாமல் அரசனுக்கும் அதனால் நற்பயன் இல்லை. பசுக்களைத் தடவிக்கொடுத்து இனிய மொழிகளினால் இன்பப்படுத்திக் கறந்தால் பால் தாராளமாகக் கிடைக்கும்; அப்படிச் செய்யாமல் மடியை அறுத்தால் பசுக்களுக்குத் துன்பமும், அறுத்தவனுக்கு இரத்தமுமே பயனாகும்.

214. துஷ்டனோடு சேர்ந்தால் வேறு காரணமில்லாமலே நமக்கு அவமானமும் கேடும் வரும். நாம் குற்றமற்றவர்களாயினும் அந்தக் கெட்ட சேர்க்கையின் பயனாக நமக்குத் துன்பம் தப்பாமல் ஏற்படும். இது உண்மை. இரும்போடு கூடிய அக்கினியும் சம்மட்டியினால் அடிக்கப்பெறுகின்றது.

215. நற்குணமுடைய மகாபுருஷன் தனக்குப் பிரீதியுடன் எவர் எதனைச் சமர்ப்பித்தாலும் அவருக்கு அளவற்ற நன்மையைச் செய்வான். குசேலர் என்னும் முனிவர் பிரேமையுடன் தனக்குக் கொண்டுவந்து கொடுத்த ஒரு பிடி அவலை அன்புடன் ஏற்று ஸ்ரீ கிருஷ்ணன் அவருக்குப் பெரும் பாக்கியத்தை யளிக்கவில்லையா ?

216 தலைவன் கெட்டிக்காரனா யிருந்தால் சேவகன எப்படிப்பட்டவனா யிருந்தபோதிலும் காரியங்கள் நிறைவேறும். நீதிசாலியாகிய ஸ்ரீராமருடைய காரியம் சபலசித்தமுடைய குரங்குகளினால் நிறைவேற வில்லையா?

217. உலகத்தில் பலம் மிக்கவனெனக் கர்வித்துச் சாது ஜனங்களை மிக அனுதாவு செய்து

ருத்துவிறவன் தப்பாமல் நசிப்பான். குணநிதி யையே பிரஹ்லாதன் என்னும் குமாரனைப் பீடித்த இரணியகசிபு நாசமடைந்தா னல்லவா?

218. எவ்வளவு கெட்டிக்காரனானாலும் அவனுக்குக் கௌரவம் உண்டாக்கத்தக்க உபகாரியானவனொருவன் இல்லாவிட்டால் அவனுக்குப் பிரகாசமும் பெருமையும் இல்லை. பதினாறுமாற்றுத் தங்கமேயானாலும் வெண்கார மில்லாவிட்டால் அது வேறு வஸ்துவோடு பொருந்தாது, பிரகாசமாகவும் விளங்காது.

219. நிலவுக் கிரணங்களைப் பருகிவாழும் சகோரப்பறவைகள் வெண்ணிலாவின் மீதுள்ள ஆசையினால் சந்திரோதயத்தைக் கண்டு மிகக் களிப்புறும் அதுபோல உலகத்தில் மனிதர்களெல்லாரும் தனத்தின்மீதுள்ள ஆசையினால், தங்களைப் போஷிக்கிற பிரபுவின் வரவை யெதிர் பார்த்து எப்பொழுதும் களிப்புறுவார்கள்.

220. மனிதன் எவ்வளவு பெருமையும் மேன்மையு முடையவனானாலும் தெய்வகதி மாறும் போது தனக்கு உள்ளவைகளை யெல்லாம் இழந்து எளிய பேதையைப்போலத் திரிவான். மகாராஜ குமாரராகிய ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி எல்லாச் சம்பத்துக்களையும் வைபவங்களையும் விட்டுக் காயுங் கிழங்குந் தின்று கவலை மேலிட்டுக் கானகத்திற் காலங்கழிக்க வில்லையா?

221. அண்டினவர்களிடத்து அன்புள்ள பிரபுவானவன் சமயத்தை யனுசரித்துக் கடினமான வார்த்தைகளைச் சொல்லியபோதிலும், நன்மை செய்யுங் காலத்தில் கொஞ்சங்கூடக் குறை

வில்லாமல் அவர்களுக்கு நன்மை செய்வான். மேகமானது நாம் பயப்படும்படியாக உறுமினபோதிலும் உடனே மழையைப் பொழியுமல்லவா!

222. நற்குணமுடையவன் தனக்குப் பிறர் எவ்வளவு அபகாரம் செய்தபோதிலும் அந்த அபகாரிகளுக்கு உபகாரமே செய்வானல்லாமல் தீமைசெய்யமாட்டான். தயிரானது தன்னை எவ்வளவு கலக்கிக் கடைந்தாலும் வெண்ணெயையே கொடுக்கின்றதல்லவா ?

223. தான் பலமிக்கவனென்றும் அழகு மிக்கவனென்றும் கர்வித்து ஒருவன் பதிவிரதைகளாகிய பிறமாதரைப் பலவந்தப்படுத்துவானானால் அவனுடைய அபிவிருத்தி அதனோடு முடிவுறும், அவனுடைய பிராணனும் போகும். இராவணாசுரன் தனக்கு வரத்தக்க கேட்டைத் தெரியாமல் சீதா மகாதேவியைக் கோரிப் புத்திரமித்திர களத்திராதிகளோடு நாசமடைந்தா னல்லவா ?

224. சத்புருஷர் எவ்வளவு விலகி வெளித்தோன்றிப் பிரகாசிக்காமல் அடங்கியிருந்த போதிலும் துர்ச்சனன் பொறுக்காமல், காரணமில்லாமலே, அவர்களுக்குத் தீமைசெய்வான். வெளிவந்து விவகரிக்காமல் ஒதுங்கி யொடுங்கிப் பெட்டிக்குள் இருக்கிற வஸ்திரத்தைக் காரணமில்லாமலே அரித்துக் கொறித்துக் கிழிக்கிற பூச்சிகளுக்கு வரும் லாபம் என்ன ?

225. துர்மார்க்கன் ஒருவருக்குத் தீமைசெய்வானே யல்லாமல் நன்மை செய்யமாட்டான். குருக்குத்திப்பூச்சியானது எப்படிப்பட்ட பழங்

களையும் மரங்களையும் நாசஞ்செய்யுமே யல்லா ஒரு மரத்திற்காவது ஒரு கை நீர் வார்த்து வளர்க்குமோ?

226 நல்ல கறிவகைகளில் எவ்வளவு நேரம் துளாவித் திரிந்தாலும் அகப்பையானது அவைகளின் சுவையை நாவைப்போல் உணராது. மூர்க்கன் குணசாலிகளுடன் எத்தனை ஆண்டுகள் கலந்து பழகினாலும் அவர்களுடைய நல்ல நடவடிக்கைகளைப் புத்திசாலியைப் போலத் தெரிந்துகொள்ள மாட்டான்.

227. பூர்வ புண்ணியப் பயன் இருந்தால் கொஞ்சங்கூட முயற்சி செய்யாதவனுக்கும் நற்பயன் தானாகவே வாய்க்கும். கடலைக் கடைந்த காலத்தில் அதனைக் கடைவதற்குப் பிரயாசைப் பட்ட தேவதைகளும் தானவர்களுமிருக்க, இடையில்வந்த விஷ்ணு மூர்த்திக்கே ஸ்ரீமகாலக்ஷ்மியும் கௌஸ்துப மணியும் கிடைத்தன.